ISSN 2320-4842 (P)

# நகரத்தார் வழிபாட்டில் நாயன்மார்கள்

**முனைவர் சி. சிதம்பரம்** M.A.,M.Phil., Ph.D.,

துணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
தமிழ்,இந்திய மொழிகள் மற்றும் கிராமியக்கலைகள் பள்ளி,
காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகம்,
காந்திகிராமம் – 624 302

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழகத்திலே சைவத்தையும், தமிழையும் வளர்த்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் அறுபத்துமூன்று நாயன்மார்களாவர். திருக்கோயில் வழிபாட்டிற்கும், சைவத்திற்கும் அடித்தளமான அருந்தமிழ் நூல்களை ஆக்கியவர்கள் சமய குரவர் நால்வரே. இவர்களையன்றிப் பெண்பாலில் போற்றத்தக்க பெருமை உடையவர் காரைக்கால் அம்மையாராவர். ஏனைய நாயன்மார்கள் இறைவனைப் பாடல்களால் பாடிப் பணியாது தம் வழிபாட்டால் மக்களுக்கு வழிகாட்டிகளாக விளங்கினர். இவர் தம் சமயப்பணித் தமிழ்ப்பணியோடு இயைந்தது. அறுபத்து மூன்று நாயன்மார்களுக்கும் ஒரு முழுமை கொடுத்தவர் சுந்தரமூர்த்தியாவார். அவருடைய திருத்தொண்டத் தொகையை அடியொற்றிச் சைவமும், தமிழும் தழைத்தன. திருத்தொண்டத் தொகையை அடியொற்றி விரிவாக அமைந்தது நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதி ஆகும். இவ்விரு நூல்களையும் அடிப்படையாகக் கொண்டு விரிவாகவும் முழுமையாகவும் திருத்தொண்டர் வரலாற்றைச் சேக்கிழார் பெருமான் உருவாக்கினார். சைவ சமய வரலாற்றிலும், தமிழ் இலக்கிய வரலாற்றிலும் திருத்தொண்டர் புராணம் குறிப்பிடத்தக்கது.

பிற்காலத்தவர்கள் திருத்தொண்டர் புராணத்திலுள்ள ஒவ்வொரு பகுதியையும் தனித்தனிக் கதையாக, நூலாக விரித்தோதினர். எனினும் 63 நாயன்மார்களுக்கு முக்கியத்துவம் வழங்கி அவர்களுக்கென தனித்தனியாக கோயில்களையும், வழிபாட்டு நெறிமுறைகளையும் வகுத்தவர்கள் நகரத்தார்கள். திருக்கோயில்களில் தெய்வ மூர்த்தங்கள் பெருகி வளர்வதற்கு நகரத்தார்களின் பங்கு அளப்பெரிது. அதனை விளக்கும் வகையில் நகரத்தார் மரபில் நாயன்மார் வழிபாடு பரவி வளர்ந்த வராற்றையும் அதன் பின்னனி குறித்தும் இக்கட்டுரை எடுத்து இயம்புகிறது.

**திறவுச் சொற்கள்**

**நகரத்தார்கள் – நாட்டுக்கோட்டைச்செட்டியார்கள் – 63 நாயன்மார்கள் – சமயக் குரவர்கள் – நாயன்மார் வழிபாடு – நாயன்மார் குருபூசை – குடுமியான்மலை – அறுபத்து மூவர் ஆட்சி**

## முன்னுரை

”திரைகடல் ஓடியும் திரவியம் தேடு” என்ற பொன்மொழிக்கேற்ப தங்களுடைய வாழ்க்கையை வாழ்ந்தவர்கள் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் ஆவர். இவர்கள் சிவகங்கை, புதுக்கோட்டை மாவட்டங்கள் இணைந்த பகுதியில் நெடுங்காலமாக வாழ்ந்து வருகின்றனர். பாண்டிய நாட்டில் வணிகத்துறையில் சிறப்பாகப்

ISSN 2320-4842 (P)

பணியாற்றி வருகின்ற பெருமக்கள் 'நகரத்தார்' என்றும், 'செட்டியார்' என்றும் குறிக்கப் பெறுகின்றனர். மேலும் இவர்கள் நாட்டுகோட்டை நகரத்தார், தனவணிகர், தனவைசியர், மகுடதன வைசியார், நாட்டரசன் கோட்டை செட்டியார், ஞானதேசிகர் போன்ற பெயர்களாலும் அழைக்கப்படுகின்றனர். இந்த நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள் அனைவரும் ஒன்றுகூடிப் பெருகி வாழ்கின்ற பகுதியைச் **"செட்டிநாடு"** என்று அழைக்கப்படுகிறது. புதுக்கோட்டை, பழைய பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் (சிவகங்கை) ஆகிய இரண்டு மாவட்டங் களில் உள்ள 96 ஊர்களை உள்ளடக்கிய பகுதியில் நகரத்தார் வாழ்கின்றனர். ஆனால் இன்று இவற்றுள் சில ஊர்கள் மறைந்து விட்டன. இச்சமூகத்தினரின் திருமண நிகழ்வுகள் மிகவும் சிறப்பு வாய்ந்தவை. இவர்கள் சமையல் கலையிலும் தங்களுக்கென்று ஒரு தனி இடம் பிடித்தவர்கள். நகரத்தார்களின் வீடுகளும் மிகப் பிரம்மாண்டமாக அமைந்திருக்கும். மன்னர்கள் இவர்களின் வீடுகளுக்கு மட்டும் கோபுரம் அமைத்து வீடுகட்டும் உரிமை வழங்கப்பட்டிருப்பது இச்சமூகத்தினரின் தனிச் சிறப்பாகும். நகரத்தார்கள் வாணிபம் மட்டுமல்லாது, சைவ சமயத்தையும் வெளிநாடுகளுக்கு எடுத்துச் சென்றவர்கள்.

சோழர் காலத்தில் சைவ சமயம் தழைத் தோங்கச் செய்தவர்களில் குறிப்பிடத்தக்க வர்கள் சமயக் குரவர்கள் நால்வரையே சாறும். இவர்களுடன் பிற சைவ அடியார்களின் வரலாற்றை விரித்துப் பாடுகிறார் சேக்கிழார் பெருமான். பிற்காலத்தவர்கள் திருத்தொண்டர் புராணத்திலுள்ள ஒவ்வொரு பகுதியை யும் தனித்தனிக் கதையாக, நூலாக விரித்தோதினர். எனினும் 63 நாயன் மார்களுக்கு முக்கியத்துவம் வழங்கி அவர்களுக்கென தனித்தனியாக கோயில் களையும், வழிபாட்டு நெறிமுறை களையும் வகுத்தவர்கள் நகரத்தார்களே. நகரத்தார்கள் வணிகம் செய்து கிடைக்கும் வருவாயில் மூன்றில் ஒரு பங்கு கோயில் திருப்பணிக்காகச் செலவு செய்துள்ளனர். "கோயில் பழுதா? கூப்பிடு செட்டியாரை!" என்ற வழக்கு ஒன்று செட்டிநாட்டுப் பகுதியில் இன்றும் நிலவி வருகிறது.

### நாயன்மார் வரலாறும், வழிபாடின்மையும்

சிவன் கோயில்களில் திருத்தொண்டர் வரலாறு இடம் பெற்றபோது அறுபத்து மூவர் வரலாறும் மக்கள் மனத்தில் ஆழப்பதிந்து வழிபாட்டை ஏற்படுத்தியது. ஒவ்வொரு நாயன்மாரும் நின்ற கோலத்தில் சிலைகளாக வடிக்கப் பட்டு ள்ளனர். ஆனால் முதற்கண் உருவாகிய அறுபத்து மூவர் வடிவங்கள் கும்பகோணத்திற்கு அருகில் உள்ள தாராசுரம் ஐராவதேசுவரர் திருக்கோயி லில் காணப்படுகின்றன. இவை ஒவ்வொன்றும் அஞ்சலட்டை ஒளிப்படம் (Post Card) அழகுற வடிக்கப்பட்டிருக் கின்றன; பெயர்களும் பொறிக்கப்பட்டி ருக்கின்றன. தாராசுரம் ஐராவதேசுவரர் கோயில் நாயன்மார் சிற்பங்கள் அனைத்தும் திருத்தொண்டர் புராண த்தின் பழமையையும், பெருமையையும் காட்டுகின்றன. ஈண்டு நாயன்மார்களின் உன்னத வாழ்க்கை நிகழ்ச்சிகள் வடிக்கப் பட்ட சொல்லோவியம் கல்லோவியமாக இந்தப் புடைப்புச் சிற்பங்கள் காட்சி தருகின்றன. இவை வழிபாட்டில் இல்லை; வரலாற்றை மட்டுமே விளக்குகின்றன.

தாராசுரத்தில் உள்ள அறுபத்துமூவர் சிற்பங்கள் திருச்சுற்று மண்டபத்தின் உள்பக்கப் பகுதியில் அடித்தளத்தில் செதுக்கப்பட்டிருக்கின்றன. கோயில் திருச்சுற்று முழுவதும் இவை அமைந்துள்ளன. அனைத்தும் ஒரே அளவின. இத்தகைய சிற்பங்களைப் பிற்காலக் கோயில் கட்டிடக்கலையில் காணமுடியவில்லை.

### நகரத்தார் சமூகம்

'நாட்டுக்கோட்டை நகரத்தார்கள்' சிவகங்கை, புதுக்கோட்டை மாவட்டங்கள் இணைந்த பகுதியில் நெடுங் காலமாக வாழ்ந்து வருகின்றனர். பாண்டிய நாட்டில் வணிகத் துறையில் சிறப்பாகப் பணியாற்றி வருகின்ற பெருமக்கள் 'நகரத்தார்' என்றும், 'செட்டியார்' என்றும் குறிக்கப் பெறுகின்றனர். இந்த நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் அனைவரும் ஒன்றுகூடிப் பெருகி வாழ்கின்ற பகுதிதான் செட்டி நாடு என்று அழைக்கப்படுகிறது. புதுக் கோட்டை, பசும்பொன்முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் (சிவகங்கை) ஆகிய இரண்டு மாவட்டங்களில் உள்ள 96 ஊர்களை உள்ளடக்கிய பகுதியில் நகரத்தார் வாழ்கின்றனர். ஆனால் இன்று இவற்றுள் சில ஊர்கள் மறைந்து விட்டன.

### சமூகப் பின்புலம்

நகரத்தார்கள் வாழுகின்ற இந்த ஊர்களில் இவர்கள் மட்டுமல்லாமல் பல்வேறு இனத்தவர்களும் வாழ்ந்து வருகின்றனர். தாம் வாழ்ந்த ஊர்களில் கோட்டை போன்ற வீடுகட்டி வாழ்ந்த தால் 'நாட்டுக்கோட்டையார்' என்றும் அழைக்கப் பெற்றனர். கோயிற் பிரிவு களில் ஒன்பது பிரிவுகளாக இவர்கள் வாழ்ந்து வந்தனர். அவர்கள் கடற் கரையை விட்டு விலகி வாழ்ந்தாலும் திரைகடல் ஓடி திரவியம் தேடியவர்கள். தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழ்ப் பண்பாட்டைப் பரப்பியவர்களில் நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் பங்கு அளப்பெரிது. அந்நாடுகளிலிருந்து தாங்கள் வாழும் பகுதிக்கு எந்தெந்தப் பொருட்களையெல்லாம் கொண்டுவர முடியுமோ அவற்றைக் கொண்டுவந்து தங்கள் வாழ்வை வளப்படுத்தியும், கலைப்படுத்தியும் உள்ளனர். இலங்கை, பர்மா போன்ற நாடுகளில் காடுகளை அழித்து விளைநிலங்களாக மாற்றிய போது, அங்குவெட்டியெடுத்தப் பல்வேறு மரங்கள் கடல்வழியாகச் செட்டிநாட்டிற்கு வந்து சேர்ந்தன. அந்த மரங்களைப் பயன்படுத்தத் தொடங்கிய நகரத்தார்கள் மரங்களில் பல்வேறு கலைப்பொருட் களையும் உருவாக்கத் தொடங்கினர். கலைப் பொருட்களை வெறும் கண்காட்சிப் பொருளாக இல்லாமல் வாழ்க்கைக்குப் பயன்படுகின்ற பொருட்களாக மாற்றினர். நகரத்தாரின் கலைப்பொருட்கள் அவர்களின் பண்பாட்டோடு தொடர்புடையன. எந்தப் பொருளும் இவர்களின் கைத் திறமையால் உருவானதில்லை. இவை யனைத்தும் கலைத்திறன் மிக்க தொழிலாளர்களைக் கொண்டு உருவாக்கப்பட்டவை. நகரத்தார்கள் இதற்காகப் பல்வேறு பகுதிகளிலும் உள்ள தச்சர்களை அழைத்துவந்து குடியமர்த்திய பெருமை உடையவர்கள். ஒரு இனம் மற்றொரு இனத்தையே வாழவைத்தது என்றால் அது செட்டிநாட்டுச் சமூகமே.

பல்லவ மன்னர்கள் கற்களில் சிலை வடித்தது போல செட்டிநாட்டில் நகரத்தார்கள் கலைப்பொருட்களை உருவாக்கி மற்ற சமுதாயத்தார்க்கு முன்னோடியாகவும் எடுத்துக்காட்டா கவும் வாழ்ந்திருந்தனர் என்பதை வரலாற்று நோக்கிலும், பண்பாட்டு அடிப்படையிலும் சமூகப்பொருளாதார அடிப்படையிலும், எதிர்காலச் சந்ததியி னருக்கு எந்தவித பாதிப்பினையும் ஏற்படுத்தாத வகையில் சூழலியல் அடிப்படையில் தம் வாழ்க்கையை அமைத்துக்கொண்டனர் என்றால் அது மிகையாகாது.

### நகரத்தார்களும், கோயில்களும்

நகரத்தார்கள் பிற சமுதாயத்தாருக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்திருந்தனர். தங்கள் வருவாயில் மூன்றில் ஒரு

பங்கினைக் கோயில்களுக்குச் செலவு செய்யும் பழக்கத்தை வழக்கமாகக் கொண்டிருந்தனர். கோயில் பழுதா? கூப்பிடு செட்டியாரை! என்ற வழக்கம் புழக்கத்தில் இருந்தது. அதுமட்டு மல்லாமல் பண்டைத்தமிழ் மன்னர் களைப்போல் குளம் வெட்டி நீரைச் சேமிக்கும் அறத்தையும் நகரத்தார் சமூகம் பின்பற்றியது. கோயிலைச் சுற்றியுள்ள பகுதிகளில் திருக்குளங்களை வெட்டுதல், திருவிழாக் காலங்களில் இறைவன் திருவீதி உலா வருவதற்குப் பயன்படும் வாகனங்களைச் செய்து வழங்குதல், திருக்கோயில்களில் மராமத்துப்பணிகளைச் செய்தல், திருக்கோயில்களுக்கு நடைப்பயணம் மேற்கொள்ளுதல், வணிகம் காரணமாக உலக நாடுகளுக்குப் பயணம் மேற் கொள்ளுதல், அவற்றை இலக்கியமாக மாற்றுதல் (பயண இலக்கியம்) போன்ற அரிய பணிகளை மேற்கொண்டுள்ளனர்

## நாயன்மார் வழிபாடு

நகரத்தார்கள் திருக்கோயில் திருப்பணி செய்யத் தொடங்கிய காலத்தில் திருத்தொண்டர் புராணத்தில் ஈடுபட்டுச் சிவனடியார்களிடத்தே பக்தி வைத்து அடியார்களது வடிவங்களைத் திருக் கோயில்களில் நிறுவினர். கி.பி.1860ஆம் ஆண்டிற்குப் பின்னர் நகரத்தார்கள் எழுப்பிய கோயில்கள் அனைத்திலும் அறுபத்து மூவர்க்கும் திருவுருவங்கள் அமைக்கப்பட்டன. நடராசர் சன்னதிக்கு எதிரில் உள்சுற்றில் வரிசையாக அறுபத்து மூவரை அமைத்து வழிபட்டனர். இவர்கள் நடராசரை வணங்கியவாறு இருக்கவேண்டும் என்பதற்காகவும், ஞானப் பகுதியாக அமையும் கன்னிமூலை என்பதற்காகவும் இவ்வாறு அமைத்திருக்கின்றனர். செட்டிநாட்டில் உள்ள பல ஊர்களில் இச்சிற்பங்களைக் காண முடியும். சில ஊர்களில் சமய குரவர் நால்வரை மட்டும் நிறுவியிருப்பர். தேவகோட்டை நகரச் சிவன் கோயிலில் சேக்கிழார்க்குத் தனிக்கருவறைஅமைத்துச் சிறப்புத் தரப்பெற்றிருக்கிறது. வன் தொண்டர் நாராயணன் செட்டியார் அவர்களின் முயற்சியால் சேக்கிழார் இவ்வூரில் தனிக்கருவறையில் வைத்துக் கொண்டாடப் பெறுகிறார். இவ்வாறு செட்டிநாட்டில் அறுபத்து மூன்று நாயன்மார்களும் கொண்டாடப் பெறுகின்றனர்.

செட்டிநாட்டு ஊர்கள் சிலவற்றில் நாயன்மார் திருவுருவங்களுக்குப் பதிலாக ஓவியங்கள் வரிசையாக வரையப் பட்டிருக்கின்றன.காரைக்குடிக்கு அருகில் உள்ள சிவன்கோயில்களில் இதனைக் காணமுடிகிறது. செட்டிநாட்டில் முதலில் கட்டப்பெற்ற சிவன்கோயில் கோவிலூர்ச் சிவன்கோயில் ஆகையால் இங்கு நாயன்மார் வடிவங்களை ஓவியமாக வரைந்திருக்கின்றனர். ஓவியமாக வரைவ தால் நாள்தோறும் திருமஞ்சனம் செய்ய வேண்டியதில்லை; ஆடை, பூச்சூட்ட வேண்டியதில்லை. இதனால் திருக்கோ யில் பணியாளர்களுக்குப் பணி கூடுவதி ல்லை. இதனால்தான் பல ஊர்களில் அறுபத்து மூவர்க்குச் சிலை அமைக்காது ஓவியங்களாக வரைந்திருக்கின்றனர்.

காரைக்குடி நகரச் சிவன்கோயிலில் அறுபத்து மூவர் மேற்குப் பிரகாரத்தில் கிழக்கு நோக்கியவாறு நிறுவப்பட்டிருக் கின்றனர். இங்குக் கற்சிலைகளாகவும் செப்புச் சிலைகளாகவும் நாயன்மார் வடிவங்கள் உள்ளன. திருவிழா நடத்துவதற்கு உரியவை செப்புச் சிலைகளே. ஆனால் இங்கு அறுபத்து மூவர்க்குத் திருவிழா நடை பெறுவதில்லை. நாயன்மார்கள் அனைவரும் இடப வாகனத்தில் உமா மகேசுவரனைத் தரிசித்தவர்கள். இவர்கள் அனைவரும் காட்சி கொடுத்த நாதர் திருவருள் பெற்றவர்கள். அதனால் அறுபத்துமூன்று நாயன்மார்களை வரிசையாக அமைத்து அவ்வரிசையின் இறுதியில் ஒருபுறம் விநாயகரையும்,

மற்றொருபுறம் உமாமகேசுவரரையும் நிறுவியிருக்கின்றனர். இவர்களுடன் சப்த மாதர்களையும், விநாயகரையும் அமைப்பர். இக்காலத்தில் இந்த வரிசை யில் சரசுவதியையும் நிறுவுகின்றனர்.

## அறுபத்து மூவர் விழா

சைவத்தில் தலம், தீர்த்தம், மூர்த்தி என்ற மூன்றும் சிறப்புடையது. அதுபோல ஒவ்வொரு ஊருக்கும் ஒவ்வொரு தெய்வத்திற்கும் புராண வரலாறும், சிறப்பும் தனித்தனியே உண்டு. தெய்வத்திற்கும் தலத்திற்கும் தொடர் புடைய லீலா வினோதங்கள் உண்டு. சிலவிழாக்கள் அனைத்துத் தலங்களிலும் கொண்டாடப்பட்டாலும் சில குறித்த தலத்திற்கு அது சிறப்பான விழாவாகக் கொண்டாடப்படுகிறது. சென்னை - மயிலாப்பூரில் மட்டுமே "அறுபத்து மூவர் விழா' சிறப்பாக நிகழ்கிறது. ஒவ்வொரு வருடமும் கார்த்திகை மாதம் நடைபெறும் இப்பெருவிழா குறிப்பிடத் தக்கது. இவ்வாறு அறுபத்துமூவர்களுக்கு என ஒரு விழா வேறு எந்த ஊரிலும் சிறப்பாக நடைபெறுவதில்லை.

## அறுபத்து மூவரின் ஆட்சி

குடுமியான்மலையில் காட்சிகொடுத்த நாதரை மையப்படுத்தி, இரண்டு பக்கங்களிலும் நாயன்மார்களின் வடிவம் நிறுவப்பட்டிருக்கிறது. குடைவரைக் கோயிலின் வடக்கே, மேற்குப்புறப் பாறையில் அறுபத்து மூவர் சிற்பங்கள் புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப் பட்டுள்ளன. இவர்களின் நடுவே உமா மகேசுவரர் இடபவாகனத்தில் காட்சி தருகின்றார். அறுபத்து மூன்று நாயன் மார்களும் நின்ற கோலத்தில் வணங்கிய வாறு காட்சியளிக்கின்றனர். இமயத்தில் இறைவன் இருந்து காட்சி தருவது போலஇச்சிற்பங்கள் காட்சியளிக்கின்றன. இத்திருவுருவங்களை அருகில் சென்று காணமுடியாத வண்ணம் அதிக உயரத்தில்,குறுகிய, சரிவான பாதைகளை உடைய மலையில் வடித்துள்ளனர். இத்தகைய புதுமையான அமைப்பைத் தமிழகத்திலுள்ள வேறு எந்தக் கோயிலிலும் காண இயலாது.

நகரத்தார்கள் பல ஊர்களில் குரு பூசை மடம் அமைத்து, நாயன்மார்களின் திருநட்சத்திரத்தன்று குருபூசை இடுகின் றனர்.இஃதன்றிமாணிக்கவாசகர், சுந்தரர் போன்றோரது வரலாற்றுத் தொடர் புடைய விழாக்களையும் செட்டிநாட்டில் கொண்டாடி வருகின்றனர். பிட்டுக்கு மண் சுமந்த விழா செட்டிநாட்டில் மிகுந்த புகழ்பெற்றது. இவ்வாறு அறுபத்து மூன்று நாயன்மார்களுக்கும் தனிச்சிறப்புக் கொடுத்துச் சைவத்திற்கு மறுமலர்ச்சி ஏற்படுத்திய வகையில் அறுபத்து மூவர் வழிபாடு சிறப்பு டையது. பெரியபுராணத்தின் பெருமை யைப் போற்றியதால் இச்சிறப்பு ஏற்பட்டது; திருக்கோயில்களில் தெய்வ மூர்த்தங்கள் பெருகி வளர்வதற்கு நகரத்தார்களின் பங்கு அளப்பெரிது என்றால் அது மிகையல்ல.

## பார்வை நூல்கள்


1. அழ.சிதம்பரம்., **நாயன்மார் நகரத்தார் ஐவர்** (2014), முல்லை பதிப்பகம், சென்னை-40.
2. எஸ்.எல்.எஸ்.பழனியப்பன்., **செட்டி நாட்டுச் சுற்றுலாவும் சிவகங்கை மாவட்ட பிரசித்தி பெற்ற திருத்தலங்களும்.**, எஸ்.எல்.எஸ்.பதிப்பகம், திருப்பத்தூர்.
3. சி.சிதம்பரம், **முதல்வன்** (2014), முதல்வன் பதிப்பகம், காரைக்குடி-1
4. ந. ஆவுடையப்பன்., **நமது செட்டிநாடு மாத இதழ்**, நவம்பர் 2017.
5. **Nagarathar App (Android)**
6. **https://sites.google.com/site/alagusenthil/nakarattar-varalaru**